[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 24

செய்தித் துறையில் 3 அறிவிப்புகள், தொழில் துறையில் 6 அறிவிப்புகள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் 3 அறிவிப்புகள், பால் வளத் துறையில் 5 அறிவிப்புகள், வேளாண்மைத் துறையில் 19 அறிவிப்புகள், தகவல் தொழில்நுட்பத் துறையில் 2 அறிவிப்புகள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் 7 அறிவிப்புகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் 6 அறிவிப்புகள், தமிழ் வளர்ச்சித் துறையில் 1 அறிவிப்பு, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையில் 6 அறிவிப்புகள், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையில் 23 அறிவிப்புகள், உயர் கல்வித் துறையில் 1 அறிவிப்பு. மொத்தம் 82 அறிவிப்புகள். மேற்குறிப்பிட்ட அறிவிப்புகளின் விவரங்களை நான் ஏற்கெனவே தங்களிடம் அளித்துள்ளேன். அவை அனைத்தையும் இந்த அவையில் நான் படித்ததாக ஏற்று அவைக் குறிப்பில் பதிவுசெய்துகொள்ளுமாறு தங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டவாறு மீதமுள்ள அறிவிப்புகள் படித்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படுகின்றன என்பதைப் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) தூத்துக்குடி மாவட்டம், வல்லநாட்டில் சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் மணிமண்டபத்தில் அன்னாரின் சிலை அமைத்தல், பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதியுதவி உயர்த்துதல் மற்றும் "மக்களின் தந்தை" திரு. ராவ் பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடுதல் குறித்த செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டின் சுதந்திரத்திற்காகவும், நமது மாநிலம் மற்றும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், சமுதாய மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டவர்களைச் சிறப்பிக்கும் வகையிலும், அவர்களின் தியாகங்களை வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளவும், மணிமண்டபங்கள், நினைவிடங்கள், நினைவு இல்லங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு உருவாக்கி, பராமரித்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக,

1. வீரபாண்டிய கட்டபொம்மன் தன் தளபதியாக மட்டுமல்லாமல், மகனாகவும் நினைத்துப் போற்றிய, திருநெல்வேலி

சீமை தந்த தீரம் மிக்க சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன். தூத்துக்குடி மாவட்டம், வல்லநாட்டில் அமைந்துள்ள அன்னாரின் மணிமண்டபத்தில், பொது மக்களின் கோரிக்கையை ஏற்று, முழுவுருவ வெண்கலச் சிலை அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. பணிக் காலத்தில் பத்திரிகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும்போது, அவர்களுக்கு பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட மருத்துவ நிதி உதவி 50 ஆயிரம் ரூபாயிலிருந்து, ஒரு இலட்சம் ரூபாயாக 1–8–2018 அன்று முதல் உயர்த்தி வழங்கிட நான் ஆணையிட்டேன். இம்மருத்துவ நிதி உதவி 2 இலட்சம் ரூபாயாக தற்போது உயர்த்தி வழங்கப்படும்.

3. தூத்துக்குடி மக்களால் "மக்களின் தந்தை" எனப் போற்றப்படுபவரான ராவ் பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் அவர்களின் சேவையைப் போற்றும் வகையில், அவரது பிறந்த நாளான நவம்பர் 15 ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அச்சமயம் தூத்துக்குடி, பாளையங்கோட்டை சாலையில் உள்ள அன்னாரது சிலைக்கு, மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்படும்.

(இ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் மருந்தியல் தொழிற்பூங்கா, சிப்காட் சிறுசேரியில் இயற்கைப் பூங்கா, சென்னைக்கு அருகில் மாநல்லூரில் மின்சார வாகனப் பூங்கா மற்றும் ஸ்ரீபெரும்புதூர் தரவு மையப் பூங்காக்கள் உருவாக்குதல் உள்ளிட்ட தொழில் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சியில், தமிழ்நாடு மேலும் மேன்மை அடையும் வகையில், பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்:

1. திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொழிற் பூங்காவில், முதற்கட்டமாக சுமார் 650 ஏக்கர் நிலப்பரப்பில் மருத்துவ மூலப் பொருட்கள் மற்றும் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் தொடங்குவதற்கு ஏதுவாக மருந்தியல் தொழிற்பூங்கா, சிப்காட் நிறுவனத்தால் 770 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும். மருந்து உற்பத்திக்குத் தேவையான அனைத்து அடிப்படை உட்கட்டமைப்பு